**செய்தி வெளியீடு எண்:337** **நாள் : 11.07.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சி தலைவி **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்களுடன் இன்று 11.07.2016 தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வு கூட்டத்தில் தொழில் துறை மற்றும் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு.சி.வி.சங்கர் அவர்கள் மற்றும் அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பங்கேற்றார்கள். இந்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்து கழக வருவாயை பெருக்கிடவும், பயணிகளுக்கு சிறப்பான போக்குவரத்து சேவையை அளித்திடவும், கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தினார்கள்.

1. அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் கழக வருவாயை பெருக்கிட, இயக்கப்பட வேண்டிய அனைத்து பேருந்துகளையும் சிறப்பாக பராமரித்து வழித்தடத்தில் தினமும் சரியான நேரத்தில் பேருந்துகளை பயணிகளின் தேவைக்கேற்ப இயக்கிட வேண்டும்.

2. வழித்தட முறிவு (Break down) இல்லாமல் அனைத்து பேருந்துகளையும் இயக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. 2016–17 ஆம் கல்வி ஆண்டிற்கான இலவச பயண அட்டை மாணவர்களுக்கு விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வரும் 31.08.2016 க்குள் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

4. அனைத்து பேருந்துகளும் முழுமையாக சுத்தம் செய்யப்படுகிறதா என்பதை உறுதி செய்தபின் தான் பேருந்துகளை வழித்தடத்தில் இயக்க அனுமதிக்க வேண்டும்.

5. உரிய அனுமதியுடன் பெறப்பட்டு நிலுவையில் இருக்கும் Chassis களை உடனடியாக கூண்டு கட்டப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். வரும் 31.07.2016 க்குள் மேற்படி பணிகளை துரிதப்படுத்தி விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. ஓட்டுநர்களிடையே விபத்துக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி விபத்துகளை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. புதிய பணிமனைகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தி விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **அம்மா** அவர்கள் சட்டமன்ற விதி எண் 110ன் கீழ் அறிவித்துள்ள நலத் திட்டங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**